**MAKKAL OSAI – SABTU, 21/01/2012**
**MUKA DEPAN**

## TIADA KOMPAUN LEWAT DAFTAR KELAHIRAN

புத்ராஜெயா, ஜன. 21– பிறப்புப் பத்திரம் கோரி காலதாமதமாகப் பதிவு செய்யும் பெற்றோர்களுக்கு விதிக்கப்படும் 50 வெள்ளி அபராதத் தொகை உடனடியாக அகற்றப்படுகிறது என்று உள்துறை அமைச்சரகம் அறிவித்துள்ளது.



ஒரு குழந்தை பிறந்து அடுத்த 42 நாட்களுக்குள் பிறப்புப் பத்திரம் கோரி அதன் பெற்றோர் பதிவு செய்ய வேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் 50 வெள்ளி அபராதத் தொகை விதிக்கப்பட்டது.

இந்த அபராதத் தொகை உடனடியாக அகற்றப்படுகிறது என்று உள்துறை அமைச்சின் தலைமைச் செயலாளர் டான்ஸ்ரீ முகமட் அடாம் நேற்று கூறினார்.

ஒரு குழந்தை பிறந்து அடுத்த 14 நாட்களுக்குள் பிறப்புப் பத்திரம் கோரி பதிவு

20ஆம் பக்கம் பார்க்க...

Putrajaya: Ketua Setiausaha Kementerian Dalam Negeri, Tan Sri Mahmood Adam berkata, Kerajaan hari ini mengecualikan kompaun RM50 terhadap orang ramai yang lewat mendaftar kelahiran berkuat kuasa serta-merta.

**MAKKAL OSAI – SABTU, 21/01/2012**
**M/S: 20**
***sambungan dari muka depan**

## TIADA KOMPAUN LEWAT DAFTAR KELAHIRAN...

## வெ.50 அபராதத் தொகை...

**முதல் பக்கத் தொடர்ச்சி...**

செய்தால் எந்தக் கட்டணமும் இனி விதிக்கப்படமாட்டாது.

14 நாட்களுக்குப் பிறகு அதாவது அடுத்த 42 நாட்களுக்குள் பதிவு செய்தால் பரிசீலனைக் கட்டணமாக 5.00 வெள்ளி செலுத்த வேண்டும்.

42 நாட்களுக்குப் பிறகு பதிவு செய்தால் பரிசீலனைக் கட்டணமாக 10 வெள்ளி செலுத்த வேண்டும் என்றார் முகமட் அடாம்.

Pengecualian itu terpakai untuk orang ramai di seluruh negara. Keputusan itu dibuat setelah mengambil kira peruntukan di bawah Seksyen 38 Akta Pendaftaran Kelahiran dan Kematian 1957 (Akta 229) dan Seksyen 17 Ordinan Pendaftaran Kelahiran dan Kematian 1951 (Sabah Cap 123).

**TAMIL NESAN – SABTU, 21/01/2012**
**MUKA DEPAN**

## TIADA KOMPAUN LEWAT DAFTAR KELAHIRAN

# குழந்தை பிறப்பு தாமத பதிவு
# அபராதம் உடனடி ரத்து!

**புத்ராஜெயா, ஜன. 21-**
நாற்பத்திரண்டு நாள்கள் கடந்த பின்னர் குழந்தை பிறப்பை பதிவு செய்வதற்கு இதுவரை விதிக்கப்பட்டு வந்த 50 வெள்ளி அபராதம் நாடு முழுமையும் உடனடியாக ரத்து செய்யப்பட்டுள்ளது. 1951ஆம் ஆண்டு பிறப்பு மற்றும் இறப்புக்கான பதிவு சட்டம் செக்ஷன் 17 மற்றும் 1957ஆம்

*18ஆம் பக்கம் பார்க்க...*

Putrajaya: Ketua Setiausaha Kementerian Dalam Negeri, Tan Sri Mahmood Adam berkata, Kerajaan hari ini mengecualikan kompaun RM50 terhadap orang ramai yang lewat mendaftar kelahiran berkuat kuasa serta-merta.

**TAMIL NESAN – SABTU, 21/01/2012**
**M/S: 18**
***sambungan dari muka depan**

**TIADA KOMPAUN LEWAT DAFTAR KELAHIRAN...**

# அபராதம் உடனடி ரத்து!

ஆண்டு பிறப்பு மற்றும் இறப்பு சட்டம் செக்‌ஷன் 38 இன் கீழ் இம்முடிவு எடுக்கப் பட்டதாக உள்துறை அமைச்சின் தலைமைச் செயலாளர் டான்ஸ்ரீ மாமுட் அடாம் கூறினார்.

தற்போதைய விதிமுறைகளின்படி பிறந்த குழந்தையை 14 நாட் களுக்குள் பதிவு செய்ய வேண்டும். இதற்கு எவ்வித கட்டணமும் கிடையாது.ஆனால், இக்கால கட்டத்தைத் தாண்டி 42 நாள்களுக்குள் பதிவு செய்வோருக்கு நடவடிக்கை கட்டணமாக ஐந்து வெள்ளி விதிக்கப்படும் என்றார் மாமுட்.

எனினும், குழந்தை பிறந்த 42 நாட்களுக்குப் பின்னர் பதிவுக்கு விண்ணப்பம் செய்பவர்களுக்கு நடவடிக்கை கட்டணமாக 10 வெள்ளியும் அபராத தொகையாக 50 வெள்ளியும் விதிக்கப்படும் என்றார்.

Pengecualian itu terpakai untuk orang ramai di seluruh negara. Keputusan itu dibuat setelah mengambil kira peruntukan di bawah Seksyen 38 Akta Pendaftaran Kelahiran dan Kematian 1957 (Akta 229) dan Seksyen 17 Ordinan Pendaftaran Kelahiran dan Kematian 1951 (Sabah Cap 123).